கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011
(ஜனவரி/பெப்ரவரி 2013)

# ECOS 3104 Economy of Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

---

01. I. 1977 க்குப் பின்னரான பொருளாதார தாராளமயமாக்கலினால் இலங்கையில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை கோட்பாட்டு ரீதியான கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்க.

(15 புள்ளிகள்)

II. இலங்கைப் பொருளாதாரத்தின் ஏற்றுமதி, இறக்குமதி துறைகள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளை தகுந்த புள்ளி விபரங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

02.I. "அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற வகையில் இலங்கையின் அபிவிருத்திக்கு வறுமையும் தடையாக உள்ளது." இலங்கையில் வறுமை நிலவுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

II. இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்கான சாத்தியமான தீர்வுகளை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

03.I. "ஒரு ஆரோக்கியமான கல்விகற்ற நுட்பத்திறன் வாய்ந்த ஊழியப்படையானது ஒரு நாட்டிற்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்த சொத்தாகும்." ஒரு சிறந்த கல்வி முறையானது பொருளாதாரத்திற்கு ஆற்றக்கூடிய பங்களிப்புக்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

II. இலங்கையின் கல்வி முறைமையில் காணப்படும் பிரச்சினைகளை குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

04. I. உலக நாடுகளையும் அங்கு வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் உலகமயமாக்கல் செயன்முறை ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

II. "உலகமயமாக்கலானது கைத்தொழில்மயநாடுகளுக்குச் சாதகமானதாகவும் வளர்முகநாடுகளுக்குப் பாதகமாகவும் அமைந்துள்ளது." இக்கூற்றினை இலங்கையை மையப்படுத்தி விளக்குக.

(15 புள்ளிகள்)

05. சனத்தொகை வளர்ச்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பை விளக்கி இலங்கைப் பொருளாதாரத்தில் சனத்தொகை வளர்ச்சியும், அதன் கட்டமைப்புமாற்றங்களும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை மதிப்பிடுக.

(25 புள்ளிகள்)

06. இலங்கையின் வரிக்கட்டமைப்பினை விளக்கி அதனை விமர்சன ரீதியாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

10 JUN 2013